**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 31/2017**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | DW.1 |
| NAME | பவுனம்மாள் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 09.04.2026.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. அசல் வழக்கு எண் 754/2004ஐ யார் தாக்கல் செய்தது என்றால் நடராஜன் தாக்கல் செய்தார். 754/2004 வழக்கை வழிக்காக போட்டார். 754/2004வழக்கை யார் போட்டார் என்ற விவரமே எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போடப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

2. என் வீட்டின் சர்வே எண் 254E, 254F. 254E,254Fஎனக்கு சொந்தமான இடமில்லை என்றாலும் அங்கு வீடில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் நடராஜன் வழி வேண்டும் என பரிகாரம் கேட்டுள்ளார். சர்வே எண் 253/4G நடராஜனுக்கு சொந்தமானது என்றால் எனக்கு தெரியாது. நடராஜன் எனக்கு என்ன உறவு என்றால் அவருக்கு நான் சித்தி.

3. நடராஜன் வீடு,என் வீடு, பெருமாள்வீடு ஒரே வரிசையில் உள்ளது என்றால் சரிதான். நடராஜன் வீட்டுக்கு என் வீட்டை தாண்டித்தான் செல்ல முடியும் என்றால் அவரது வீட்டுக்கு வேறு வழி உள்ளது. என் வீட்டுக்கு பக்கத்தில் நடராஜன் வீடு உள்ளதா என்றால் உள்ளது. 754/2004 வழக்கை நான்தான் போட்டேன் என்றாலும் அதில் என்ன பரிகாரம் கேட்டேன் என்றால் வழி வேண்டும் என பரிகாரம் கேட்டேன். அந்த வழிப்பாதையின் சர்வே எண் 253/3 மற்றும் 254.

4. சர்வே எண்254 சொத்து எங்களுடையதா அல்லது அரசுக்கு சொந்தமானதா என்றால் எங்களுடையது. 254 சர்வே எண் வழிப்பாதையின் உடையதா என்றால் ஆமாம். நான் அந்த சர்வே எண்ணில் தான் நடந்து சென்று வருகிறேனா என்றால் ஆமாம். சர்வே எண் 253/3 எங்களுடையதா

அல்லது அரசுக்கு சொந்தமானாதா என்றால் எங்களுடையது. 253/3 எங்களுக்கு சொந்தமானது என்பதற்கு ஆவணம் எதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

5. சர்வே எண் 253/3 யாரிடம் இருந்து யார் விலைக்கு வாங்கியது என்றால் விலைக்கு வாங்கவில்லை. அது எனது பூர்வீக சொத்தா என்றால் என் கணவருக்கு பாகமாக வந்தது. எனக்கு படிக்கத் தெரியாது. சர்வே எண் 253/3 எனக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றாலுரம் எனது கணவரது பூர்வீக சொத்து இல்லை என்றாலும் அது அரசுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல.

6. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 754/2004ல் சர்வே எண் 253/3 தொடர்பாக இன்றியமையா வசதியுரிமை கேட்டுத்தான் வழக்குப் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழிப்பாத்தியம் கேட்டு தான் வழக்குபோட்டேன் என்றாலும் அது என் சார்பாக தீர்ப்பானது என்றால் சரியல்ல. அந்த வழக்கில் வழியில் நான் போகலாம் என தீர்ப்பும் தீர்ப்பாணையமும் கொடுத்தார்கள் என்றால் ஆமாம். அந்த தீர்ப்பு அடிப்படையில் என் மகனுக்கு நான் தானம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

7. அந்த தான செட்டில் மெண்ட் ஆவணத்தில் 253/3ல் உள்ள வழியை சேர்த்துக் கொடுத்தேன் என்றால் சரிதான், வழிப்பாத்தியம் வேண்டி கொடுத்தேன். அந்த வழிப்பாத்தியம் அரசுக்கு சொந்தமானது என்றால் என்னுடையது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பிறகு வழிப்பாத்தியம் கொடுத்தேன். அந்த வழியானது நேரடியாகவோ மறைமுகமாகவோ எனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் வழியில் போக வர மட்டும் பாத்தியம் கொடுக்கப்பட்டது என்றாலும் அதை பொறுத்து தானம் எழுதிக்கொடுக்க உரிமை இல்லை என்றாலும் எழுதிக்கொடுத்திருந்தால் அது தவறு என்றால் சரியல்ல.

8. 175/2015 தான செட்டில் மெண்ட் ஆவணத்தில் சாவே எண் 253/3 பகுதியை தானம் கொடுத்தது மோசடியானது என வேலூர் மாவட்ட பதிவாளர் அந்த ஆவணத்தை தள்ளுபடி செய்தார் என்றால் எனக்கு தெரியாது. 31.03.2022ல் ஆணை எண் 5935/இ2/2020 படி தான செட்டில் மெண்ட் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் என் பாக சொத்தை தான் தானம் கொடுத்தேன். எங்கள் குடும்பத்தில் வாதியின் அப்பா தான் மூத்தவர் என்றாலும் அதனால் அவரது பாக சொத்திற்கு செல்ல அவருக்கு வழிப்பாத்தியம் உள்ளது என்றாலும் அதை நாங்கள் தடுத்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அவரது இடத்திற்கு செல்ல வேறு வழி உள்ளது, வழிப்பாத்தியம் கேட்டு நாங்கள் மட்டும் தான் வழக்கு போட்டோம்.

9. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 அசல் வழக்கில் உள்ள தாவா ஆவணம் நான் போட்டது என்றால் சரிதான். அந்த தாவா உடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் வரிசையாக பெருமாள் வீடு, எனது 2 வீடு, மற்றும் நடராஜன் வீடு உள்ளது என்றால் சரிதான். நடராஜன் வீட்டிற்கு அந்த வழி தவிர வேறு வழி இல்லை என்றால் சரியல்ல, அவருக்கு வழிவேண்டி இருந்தால் வழக்குப் போட்டிருப்பார். உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனு எண் 2982/2023ல் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அதனால் இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.
நடராஜனின் வழிப்பாத்தியத்தை தடை செய்ய எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/– K.கார்த்திக் அசாத்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.